வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 302/2020

வழக்குசாட்சி LW7/PW3

| பெயர் | லட்சுமணன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கருப்பையா | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 44 |

தேதி 20.07.2026

எதிரிகள் 1, 2, 5 ஆஜர். எதிரி 4 ஆஜர் இல்லை.மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 17.11.2015 அன்று மதியம் 1.00 மணியளவில் மாதவரம் மூலக்கடை சந்திப்பு அருகில் நானும், எனது நண்பரான மோகன்தாஸ்

நின்றுகொண்டிருந்தபோது அங்கு மாதவரம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் போலீசார் இரண்டு நபர்களை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது மாதவரம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் என்னையும் எனது நண்பரான மோகன்தாஸ் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் அன்றைய தினமே மதியம் 2.05 மணியளவில் மூலக்கடை பெரம்பூர் ரோடு ஓரமாக உள்ள கால்வாய் அருகே சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு ராடை ஆய்வாளரிடம் எடுத்து ஆஜர் செய்து அதனை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்களது முன்னிலையில் கைப்பற்றியபோது சாட்சியாக இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.